புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com





ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஆகஸ்டு 03, 2023 • புரட்சி 23 • முழக்கம் 29 • விலை ரூ.3.00


## சென்னை, ஈரோடு, கடலூர், கோவை, திருப்பூரில்

# கழகத்தின் தெருமுனைக் கூட்டங்கள்

எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டம் 26.07.2023 அன்று 27-வது கூட்டம் மாலை 5 மணிக்கு பார்டர் தோட்டம் சுப்பராயன் தெருவிலும் 28-வது கூட்டம் மாலை 7 மணிக்கு எல்.ஜி.என் ரோடு கோபால்தாஸ் தெருவிலும் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, அர்ச்சகர் மாணவர் சங்கத் தலைவர் வ.அரங்கநாதன், திண்டுக்கல் பெரியார் நம்பி, எட்வின் பிரபாகரன் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். இராஜேசு நன்றி கூறினார்.

அடுத்தகட்டமாக வட சென்னையில் 29.07.2023 சனிக்கிழமை தொடங்கியது. 31-வது கூட்டம் மாலை 5 மணிக்கு எழும்பூர் வீராசாமி தெருவிலும், 32-வது கூட்டம் மாலை 7 மணிக்கு சேத்துப்பட்டு அம்பேத்கர் திடலிலும் நடைபெற்றது. நிகழ்வின் தொடக்கமாக நாத்திகன் - உமாபதி குழுவின் அரசியல் நய்யாண்டி நிகழ்ச்சி நடைபெற்றது.

அடுத்ததாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மைய சென்னை மாவட்டச் செயலாளர் இளங்கோ, மக்கள் அதிகாரம் காமராஜ், கழக மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, கழகத் தோழர்கள் திண்டுக்கல் பெரியார் நம்பி, சேத்துப்பட்டு இராசேந்திரன், தினகரன் ஆகியோர் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசினார்கள்.

ஈரோடு தெற்கு : எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டம் ஈரோடு தெற்கு மாவட்ட சார்பாக 6-வது கூட்டமாக 30.07.2023 மாலை 5 மணிக்கு ஈரோடு பாரதி நகரில் இளைஞரணி தலைவர் பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஈரோடு மாமன்ற உறுப்பினர் தமிழ் பிரியன், திருப்பூர் நகர அமைப்பாளர் முத்து, அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். 7-வது கூட்டம் இரவு 7.30 மணிக்கு ஈரோடு PKD நகரில் மாநகரப் பொறுப்பாளர் சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் திருப்பூர் நகர அமைப்பாளர் முத்து, இளைஞரணி தலைவர் பழனிசாமி, மாவட்ட அமைப்பாளர் கிருஷ்ணமூர்த்தி, அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். அழகு, திருப்பூர் சக்தி, ஈரோடு சங்கமம் சுரேஷ், நல்லதம்பி, முன்னாள் மாமன்ற உறுப்பினர் பூபதி, எழிலன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கடலூர் : ஜூலை 21,22 தேதிகளில் கடலூர் மாவட்டக் கழக சார்பில் எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டம். நெய்வேலி பெரியாக்குறிச்சி, வடலூர், குறிஞ்சிப்பாடி, குள்ளஞ்சாவடி, பண்ருட்டி, நெல்லிக்குப்பம், கடலூர் ஜவான் பவன், கடலூர் பெரிய காட்டு பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இரண்டு நாட்கள் நடைப்பெற்றது. கடலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ர.சிவக்குமார் தலைமையேற்க, மாவட்ட அமைப்பாளர் சதீசு, மாவட்டத் துணைத் தலைவர் செ.பிரகாசு முன்னிலை வகித்தனர். மாவட்டத் தலைவர் அ.மதன்குமார் வரவேற்புரையாற்றினார். சேரி குயில் சேட்டு மற்றும் பிரகாசு குழுவின் இசை நிகழ்ச்சியுடன் கூட்டம் தொடங்கியது.

கழகத் தலைமை செயற்குழு உறுப்பினர் ந.அய்யனார், புதுச்சேரி மாநில திமு.கழக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் காயத்ரி ஸ்ரீகாந்த், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில அமைப்புச் செயலாளர் திருமார்பன், விழுப்புரம் மாவட்டக் கழகத் தலைவர் இளையரசன், அரசு ஊழியர்கள் ஐக்கிய பேரவையின் தலைவர் தோழர் பாவாணன், அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர் அறிவழகன், வழக்கறிஞர் அழகரசன், ஆசிரியர் பழனிவேல் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## மணிப்பூர் வன்முறை : சேலத்தில் ரயில் மறியல்

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் 200 பேர் கைது




*மணிப்பூரில் தொடரும் வன்முறையைக் கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சேலத்தில் 29.07.2023 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் சேலம் இரயில் நிலையம் முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது.*

*போராட்டம் கண்டன முழக்கங்களோடு தொடங்கியது. மறியல் போராட்டத்தில் சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் எ.சுப்பிரமணி, மதிமுக அரசியல் ஆலோசனைக் குழு உறுப்பினர் பி.எஸ்.சுப்பிரமணி,*

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# வாழ்ந்துகாட்டிய பெரியாரிஸ்ட் நன்னன்

*பேராசிரியர் நன்னன் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவரது நூற்றாண்டு நிறைவு விழாவில் வெளியிட்டுள்ள அறிவிப்பு பாராட்டி வரவேற்கத்தக்கதாகும். அவரது குடும்பத்தார் வேண்டுகோள் ஏதும் முன் வைக்காமலேயே முதல்வர் இந்த அறிவிப்பை வெளியிட்டு இருப்பது மேலும் சிறப்பு. அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் மாணவராக பயிலும் போதே பேராசிரியர் க.அன்பழகன் போன்றவர்களுடன் தன்னை திராவிட இயக்கத்தில் இணைத்துக் கொண்டவர் பேராசிரியர் நன்னன்.*



*பெரியார் அழைப்பை ஏற்று ஈரோட்டில் இருந்து வெளிவந்த குடிஅரசு பத்திரிகையில் பணியாற்றினார். அந்த காலக் கட்டங்களில் கடும் எதிர்ப்புகளுக்கு இடையே நடந்த சுயமரியாதை கொள்கைப் பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்று பேசினார். பிறகு கல்வித் துறையில் ஆசிரியராக, பேராசிரியராக உயர்ந்தார்.*

*முழுமையான கடவுள், மத, ஜாதி மறுப்பாளராக பெரியாரின் பாதையில் வாழ்ந்து காட்டிய பெருமை அவருக்கு உண்டு. அவரது விரிவான திராவிடர் சுயமரியாதை இயக்கப் பயணங்கள் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய மாத இதழான நிமிர்வோம் இதழில் அவர் அளித்த பேட்டியில் அவர் பதிவு செய்துள்ளார். (2017 ஏப்ரல்) உண்மை பெரியாரிஸ்ட்கள் தங்களைப் பற்றிய தன் வரலாறுகளை பதிவு செய்வதில் தயக்கம் காட்டுவார்கள், பேராசிரியரும் அவ்வழி வந்தவர் தான். ஆனாலும் அளித்த உளம் திறந்து அளித்த பேட்டியாக அது அமைந்தது.*

*பெரியார் குறித்தும், தமிழில் பிழையின்றி எழுதுவது குறித்தும் 124 நூல்களை அவர் எழுதியுள்ளார். பெரியார், சுயமரியாதை, பெரியாரின் பார்வையில் மதம், ஜாதி, கடவுள், தொழிலாளர்கள், கலை. இலக்கியங்கள், பெண்ணுரிமை, பெரியார் நடத்திய போராட்டங்கள், பெரியாரின் சுயமரியாதை இயக்கம். பெரியாரின் உவமைகள், பெரியாரின் குட்டிக் கதைகள், பெரியார் கருத்துகளை உள்ளடக்கிய இரண்டு தொகுதிகளான பெரியார் கணிணி உள்ளிட்ட ஏராளமான நூல்களை தமிழர்களுக்கு வரலாற்றுக் கருவூலமாக அவர் வழங்கிச் சென்றிருக்கிறார்.*

*கேட்பவர்களில் உள்ளத்தில் பெரியாரிய சிந்தனைகளை ஆழமாக பதிய வைக்கும் பேச்சுத்திறமை அவரிடம் உண்டு. சிங்கப்பூர் தொலைக்காட்சியில் அவர் நடத்திய தமிழ் பாடம் உலகம் முழுதும் வாழும் தமிழர்களுக்கிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. திராவிடர் கழகம் உருவாக்கிய மூதறிஞர் குழுவில் இடம் பெற்று உலகம் முழுதும் வாழும் தமிழர்கள் தமிழை எளிதாக கற்க பாடங்களை உருவாக்கினார். திராவிடர் கழகப் பயிற்சி முகாம்களில் பங்கேற்று பெரியாரியல் வகுப்புகளை எடுத்தார். அருப்புக்கோட்டை டி.கே. சுப்பிரமணியம் நினைவு அறக்கட்டளை சார்பில் திராவிடர் கழகம் பெரியார் குறித்து நடத்திய பெரியார் அறக்கட்டளை சொற்பொழிவில் மூன்று நாட்கள் பெரியாரியல் குறித்து மூன்று நாட்கள் பெரியார் பேருரையாற்றினார்.*

*திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து 1996 இல் பெரியார் திராவிடர் கழகம் உருவாகிய போது அதன் தொடக்க விழாவில் பங்கேற்று பேசியவர்களில் ஒருவர் பேராசிரியர் நன்னன், அவர் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனராக இருந்த காலத்தில் தான் பெரியார் நூற்றாண்டு விழா நடந்தது. தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை பெரியார் நூற்றாண்டு விழாவில் அன்றைய முதல்வர் எம்ஜிஆர் அமலாக்க முன்வந்த போது அதற்கான செயல் திட்டங்களை தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனராக இருந்த அவர் உருவாக்கினார். சுயமரியாதை திருமணங்களில் அவரது உரை மனவிழாவுக்கு வந்திருக்கும் கொள்கை ஈடுபாடு இல்லாத பெண்களையும் கவர்ந்திழுத்து சிந்திக்க வைக்கக்கூடியது*

*மிகச்சிறந்த மருத்துவ ஆய்வாளராக உருவாகிவந்த அவரது மகன் அண்ணலின் திடீர் மறைவு அவருக்கு பேரிடியாக அமைந்துவிட்டது. மனம் தளராது அண்ணல் நினைவு அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி ஆண்டுதோறும் பகுத்தறிவு கொள்கைகளை பரப்பும் நாளாக கடைபிடித்து வந்தார்.*

## தலையங்கம்

# இந்தியா vs பாரதம்

பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு எதிராக 26 எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து தங்களது கூட்டணிக்கு இந்தியா (I-N-D-I-A) என்று பெயர் சூட்டியுள்ளனர். மோடியால் இதை சகித்துக் கொள்ள முடியவில்லை, இந்தியன் முஜாகிதின், கிழக்கிந்திய கம்பெனியும் இந்தியா என்ற பெயரையே பயன்படுத்தியது என்று கூறி இந்தியா மீது வெறுப்பை உமிழ்ந்துள்ளார். அவர்களும் தங்களது பெயர்களில் இந்தியா என்று தான் வைத்திருக்கிறார்கள் என்று மோடி பதிலளித்திருக்கிறார். இந்தியா என்ற பெயர் தீவிரவாதிகளால் பயன்படுத்தப்படுகிறது என்ற கருத்தை மோடி வலியுறுத்துகிறார்.

தமிழ்நாட்டில் பாஜக பார்ப்பன தலைவர்களில் ஒருவரான ஹெச்.ராஜா 'Anti Indian' என்று பேசுவதை வழக்கமாக வைத்திருக்கிறார், இப்பட்டியலில் தற்போது மோடியையும் சேர்த்துக் கொள்ளலாம், இதற்கு சில வரலாற்றுப் பின்புலன்களும் உண்டு.

ஆர்.எஸ்.எஸ் என்ற சித்தாந்தத்தை உருவாக்கிய கோல்வாக்கர் Bunch Of Thoughts என்ற நூலை உருவாக்கினார். இது இந்துக்களுக்கான வேத புத்தகம் என்று சங்கிகளால் கூறப்படுகிறது, அந்த வேத புத்தகத்தில் கோல்வாக்கர் கூறுகிறார், இந்தியா என்ற சொல் இஸ்லாமியர்களையும் கிறிஸ்துவர்களையும் உள்ளடக்கிய சொல், அந்த சொல்லை நாம் பயன்படுத்தக் கூடாது, பாரதியம் என்பது மட்டும் தான் இந்துக்களை குறிக்கின்ற சொல். எனவே பாரதியம் என்ற ஒன்றை மட்டும் தான் நாம் பயன்படுத்த வேண்டும் என்று தெளிவாக குறிப்பிடுகிறார் கோல்வாக்கர். அதன் காரணமாகத்தான் ஆர்.எஸ்.எஸ் அதன் பரிவாரங்கள் எந்த அமைப்புக்கும் இந்தியா என்ற பெயரை சூட்டுவதில்லை, இந்தியா என்ற பெயரை அவர்கள் முழுமையாக தவிர்த்து வருகின்றனர். 'இந்திய ஜனதா கட்சி' என்பதற்கு பதிலாக 'பாரதிய ஜனதாக் கட்சி' என்று தான் மோடியின் கட்சிக்கும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அந்த பாரதிய ஜனதா கட்சியின் துணை அமைப்புகள் எதற்கும் இந்தியா என்ற பெயரை சூட்டவே இல்லை,

நம்மைப் பொறுத்தவரை நீ பாரதியனாக இருக்க விரும்புகிறாயா? இல்லை இந்தியனாக இருக்க விரும்புகிறாயா? என்று கேட்டால் இந்தியனாக இருக்க விரும்புகிறேன் என்பதுதான் சரியான பதிலாக இருக்க முடியும். நீ இந்தியனாக இருக்க விரும்புகிறாயா? இல்லை தமிழனாக விரும்புகிறாயா? என்று கேட்டால் தமிழனாக இருக்க விரும்புகிறேன் என்று சொல்வது தான் நமது பதிலாக இருக்க முடியும்

அசாம் மாநில முதல்வர் ஹிமாந்தா பிஸ்வாஸ் சர்மா, அண்மையில் தனது டிவிட்டர் பதிவில் "இந்தியா" என்ற பெயர் அரசியல் சட்டத்தில் இருந்து நீக்கிவிட வேண்டும். அது பிரிட்டிஷாரிடமிருந்து கடன் வாங்கிய சொல். இந்திய நாகரீகம் வேறு, பாரதிய நாகரீகம் வேறு" என்று வெளிப்படையாகவே பதிவிட்டிருக்கிறார்.

பாஜக மாநிலங்களவை உறுப்பினரான நரேஷ் பன்சால் என்பவர் நாடளுமன்றத்தில் பேசுகையில் "பிரிட்டிஷ் காலனி ஆட்சி சூட்டியப் பெயர் இந்தியா, நமது நாட்டின் உண்மையான பெயர் சமஸ்கிருத மொழியில் உள்ள 'பாரத்' என்பதுதான்" அரசியலமைப்புச் சட்டத்திலிருந்தே இந்தியா என்ற சொல்லை நீக்க வேண்டும் என்றும் பேசியுள்ளார்.

இப்போது பாரதியத்துக்கும் இந்தியாவுக்கும் நடக்கும் போரில் பாரதியத்துக்கு எதிராக இந்தியா என்ற பெயரை சூட்டியிருப்பது தான் அவர்களை எதிர்ப்பதற்கான சரியான ஆயுதமாக இருக்கும் என்ற பார்வையில் நாம் பிரச்சனையை நாம் அணுக வேண்டி இருக்கிறது. 26 எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து சூட்டியிருக்கிற இந்தியா என்ற பெயர் பாஜகவை நிலைக்குலையச் செய்துள்ளது.

'பாரதம் என்று இவர்கள் அப்போது கூறியது பர்மா, பாகிஸ்தான், ஆப்கான், இலங்கை நாடுகளை உள்ளடக்கி இருந்தது. இப்போது அவைகள் தனி நாடு ஆகிவிட்டன, இந்தியாவின் எல்லை வரையறுக்கப்பட்ட நிலையில் பாரதம் என்பதற்கு என்ன அர்த்தம் இருக்க முடியும்.

# பாஜகவின் ஊழல் எதிர்ப்பு நாடகம்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கோடி கோடியாக பேரம் பேசி தங்கள் கட்சி ஆதரவாளராக மாற்றி ஆட்சியை கவிழ்த்து வருகிறது பாஜக. இந்த கோடிக்கணக்கான ரூபாயை லஞ்சம் கொடுக்க பாஜகவுக்கு எங்கிருந்து பணம் வந்தது, பேரம் பேசுவதே லஞ்சம் தானே, பிஎம் கேர் என்ற ஒரு தனி அமைப்பை மோடி உருவாக்கி அதில் பல்லாயிரம் கோடி நன்கொடைகளாக குவித்து வருகிறார்கள், இதற்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பத்திரம் என்ற பெயரில் பெரும் தொழில் நிறுவனங்களிடம் இருந்து பெறப்படும் நன்கொடைகளில் 90% பாரதிய ஜனதா கட்சி பறித்துக் கொள்கிறது. அமித் ஷா மகன் ஜெய் ஷா தொடங்கிய நிறுவனத்தின் 2014ஆம் ஆண்டு சொத்து மதிப்பு 75 லட்சம், இது 2023 இல் 140 கோடியாக உயர்ந்துள்ளது எப்படி? இது ஊழல் இல்லையா என்று கேட்கிறார் உதயநிதி ஸ்டாலின். இதுவரை பதில் ஏதுமில்லை.

# தமிழ்நாட்டு மக்கள் விலா நோக சிரிக்கிறார்கள்

தமிழ்நாட்டில் எம்ஜிஆர், ஜெயலலிதா கொள்கைகளைப் பரப்புவதற்கே அண்ணாமலை ரத யாத்திரை புறப்படுகிறார் என்கிறார் அமித் ஷா. ஜெயலலிதா ஊழல் ஆட்சி நடத்தியவர் என்று டைம்ஸ் ஆப் இந்தியா நாளேட்டுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு பேட்டி அளித்தவர் தான் அண்ணாமலை. அதிமுகவுடன் கூட்டணி வைத்தால் பாஜகவில் இருந்து விலகுவேன் என்றெல்லாம் மிரட்டினார் அண்ணாமலை, அவரே இப்போது ஜெயலலிதா எம்ஜிஆர் கொள்கைகளை பரப்ப 234 தொகுதி இருக்கும் யாத்திரை போகிறாராம்

# பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது.

கிறிஸ்தவனையும் முஸ்லிமையும் நாம் தேவனின் பிள்ளைகளாக நினைத்துக் கொண்டிருந்தோம், அது சாத்தானின் பிள்ளைகளாகி பல வருடங்கள் ஆயிடுச்சு. இந்த நாட்டில் ஏற்படும் பல பிரச்சனைகளுக்கு முக்கிய காரணமே இஸ்லாமியரும் கிறிஸ்தவர்களும் தான்.

– சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் சீமான் (30.07.2023)

சங்கிகள் கூட இப்படி வெளிப்படையாக பேசுவதில்லை, தமிழ் சங்கி சிறுபான்மை சமூகத்திற்கு மத அடையாளத்தை முதன்மைப்படுத்தி ஆர்எஸ்எஸ் குரலாகவே பேசுகிறார், நாம் தமிழர் என்ற பெயரை நாம் இந்து என்று மாற்றிக் கொண்டு அர்ஜுன் சம்பத்தோடு இணைந்தாலும் வியப்பில்லை.

# கோவை மாவட்டக் கலந்துரையாடல் முடிவுகள்



*கோவை மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்டம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், கழகப் பொருளாளர் துரைசாமி முன்னிலையிலும் 30.7.2023 காலை 11 மணிக்கு கோவை ஆதித்தமிழர் பேரவை தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது .*

*இந்த கலந்துரையாடல் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி எது திராவிடம்? எது சனாதனம்? என்ற தலைப்பில் கழகம் நடத்திக் கொண்டிருக்கும் தெருமுனை கூட்டங்களின் அவசியம் குறித்தும் மாவட்ட கழகப் பணிகள் குறித்தும் உரையாற்றி கோவை மாநகர, மாவட்டத்திற்கு புதிய பொறுப்பாளர்களை அறிவித்தார். கழகத்தின் பொருளாளர் துரைசாமி, தலைமைக்குழு உறுப்பினர் பன்னீர்செல்வம் ஆகியோரும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.*

*கோவை மாவட்ட தலைவராக மேட்டுப்பாளையம் பா. இராமச்சந்திரன், மாவட்டச் செயலாளராக சூலூர் இரா.பன்னீர்செல்வம், மாவட்ட அமைப்பாளராக புரட்சித்தமிழன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். கோவை மாநகரத் தலைவராக நா.வே.நிர்மல் குமார், மாநகரச் செயலாளராக செ.வெங்கட், மாநகர அமைப்பாளர்களாக கிருஷ்ணன், மாதவன்,*

*அன்னூர் பகுதி அமைப்பாளராக பார்த்திபன், பெரியநாயக்கன்பாளையம் பகுதி அமைப்பாளராக கணேஷ், கணபதி பகுதி அமைப்பாளராக சதீஷ், சிங்காநல்லூர் பகுதி அமைப்பாளர்களாக கணேஷ் , சிவராசு, பீளமேடு பகுதி அமைப்பாளர்களாக இராஜாமணி, இராமகிருஷ்ணன், உக்கடம் பகுதி அமைப்பாளராக பொன்மணி, வடவள்ளி பகுதி அமைப்பாளராக ஸ்டாலின் ராஜா, கிணத்துக்கடவு பகுதி அமைப்பாளராக இராமகிருஷ்ணன், சூலூர் பகுதி அமைப்பாளராக பாபு, நீலாம்பூர் பகுதி அமைப்பாளராக தோழராக தங்கராசு ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

# இனப் பிரச்சனைக்கு மதச் சாயம் பூசிய மோடி அமித் ஷா கலவரக்காரர்களிடம் 5000 காவல் நிலைய துப்பாக்கிகள்

தலைநகர் டெல்லியில் ஓடும் பேருந்தில் கொடூரமான பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கி கொலைசெய்யப்பட்ட நிர்பயாவை இந்தியாவின் மகளாகக் கருதி, அவருக்காக நியாயம் கேட்டு வீதிக்கு வந்த சிலரே மணிப்பூரின் நிர்பயாக்களை வேறுமாதிரி பார்ப்பது கால மாற்றத்தின் பெருந்துயர். ஜூலை 20-ம் தேதி அந்த வீடியோ வெளியாகும்வரை மணிப்பூர்க் கலவரத்தை வடகிழக்கு மாநிலம் ஒன்றில் நிகழும் வழக்கமான மோதலாகவே பலர் பார்த்தார்கள். அது எவ்வளவு ஆழமான இனமோதலாக உருவெடுத்து, சக மனிதர்களாக நாம் வெட்கித் தலைகுனிய வேண்டிய சம்பவங்களை நிகழ்த்தியிருக்கிறது என்பதற்கு ஒற்றை ஆதாரம். ஒருவேளை அது இல்லாமல் போயிருந்தால், ‘இப்படி எதுவுமே நடக்கவில்லை’ என்று மூடி மறைக்கப்பட்டிருக்கலாம்.

பெரும்பான்மை மெய்தி இனத்தினருக்கும் சிறுபான்மை குக்கி பழங்குடி சமூகத்தினருக்கும் மோதல் தொடங்கிய மறுநாளான மே 4-ம் தேதி அந்தச் சம்பவம் நடைபெற்றிருந்தது. ‘சுரசந்த்பூரில் மெய்தி இனப் பெண்களை குக்கி பழங்குடியினர் பாலியல் வன்கொடுமை செய்து கொன்றார்கள்’ என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு டெல்லியில் நடைபெற்ற ஒரு சம்பவத்தின் புகைப்படங்களை ஆதாரமாக இணைத்து ஒரு பொய்ச்செய்தி சிலரால் பரப்பப்பட்டது. அது மெய்தி இனத்தவரைக் கொந்தளிக்கச் செய்தது. ‘நாம் இதற்குப் பழி வாங்குவோம்’ என்று காங்போக்பி மாவட்டத்தில் ஒரு கிராமத்தைச் சூழ்ந்தது மெய்தி இன கும்பல் ஒன்று. குக்கி இனத்தினர் வசிக்கும் கிராமம் அது. மக்கள் பயந்து காட்டுக்குள் ஓடி ஒளிய, கிராமத்தைச் சூறையாடி வீடுகளைத் தீயிட்டு எரித்தது கும்பல். அதன்பின் காட்டுக்குள் பதுங்கியிருந்தவர்களைத் தேடியது. அவர்கள் கையில் மூன்று பெண்கள் சிக்கினர். முன்னாள் ராணுவ வீரரின் மனைவியான 50 வயதுப் பெண், இன்னும் இருவர் 40 வயதிலும், 20 வயதிலும். அவர்களைத் தாக்கி ‘உடைகளைக் களையா விட்டால் கொன்றுவிடுவோம்’ என்று மிரட்டியது.

தாக்குதலில் காயமடைந்த 50 வயதுப் பெண்ணை விட்டுவிட்டு மற்ற இருவரையும் இழுத்துச்சென்று நிர்வாண ஊர்வலம் நடத்தியது. கலவர வெறி ஏறிய ஆண்கள் அவர்களிடம் தகாத முறையில் நடந்துகொண்டார்கள். “என்னுடன் இழுத்து வரப்பட்ட இன்னொரு பெண்ணை கொஞ்ச நேரத்தில் கடுமையாகத் தாக்கினார்கள். அவர் மயங்கி விழுந்ததால் விட்டுவிட்டனர். என்னைத் தனியாக இழுத்துச் சென்று பலர் பாலியல் வன்கொடுமை செய்தார்கள். தடுக்க வந்த என் அப்பாவையும் சகோதரனையும் கொன்றுவிட்டார்கள். அந்த கும்பலில் வந்தவர்களில் பலரை எனக்கு அடையாளம் தெரியும், பக்கத்து கிராமங்களைச் சேர்ந்தவர்கள். ஒருவன், என் சகோதரனின் நண்பன்” என்று சொல்லி வெடித்து அழுகிறார் அந்த இளம்பெண். கலவரத்தைக் கட்டுப்படுத்த வந்த போலீஸாரிடம் தாங்கள் தஞ்சமடைந்ததாகவும், அவர்கள்தான் தங்களை கலவர கும்பலிடம் ஒப்படைத்ததாகவும் குற்றம்சாட்டுகிறார் அவர்.

**மணிப்பூரின் நிர்பயாக்கள் :** அந்தப் பெண் அதன்பின் போலீஸில் புகார் கொடுத்தார். ஆனால், 78 நாள்கள் கழித்து அந்த வீடியோ காட்சிகள் வெளியாகும்வரை இது மறைத்து வைக்கப்பட்டிருந்தது. எல்லாவற்றையும் மறுக்கும் மணிப்பூர் முதல்வர் பிரேன் சிங், மிக அரிதாக இந்தச் சம்பவம் நடந்ததை ஒப்புக்கொண்டார். “இதுபோல நூற்றுக்கணக்கான சம்பவங்கள் நடந்திருக்கலாம்” என்று ஒரு டி.வி பேட்டியில் சொன்னார். ஆனால், மறுநாளே உஷாராகி இதை மறுத்தார். “மணிப்பூர் கலவரங்கள் தொடர்பாக 6,068 வழக்குகள் பதிவாகியுள்ளன. எல்லாமே கொலை, தீவைப்பு, சூறையாடுவது போன்ற குற்றங்கள்தான். இந்த ஒன்று தவிர பாலியல் வன்முறை எங்குமே நிகழவில்லை” என்று அவர் சொன்னார். ஆனால், குக்கி மாணவர் அமைப்பு இதை வன்மையாக மறுத்திருக்கிறது. “இதுவரை 27 குக்கி பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 7 பேர் பாலியல் வன்முறையில் இறந்துள்ளனர். 8 பேர் ஆயுதங்களால் தாக்கப்பட்டு ரத்தக்காயத்தால் இறந்துள்ளனர். 2 பேர் எரித்தும், 5 பேர் துப்பாக்கியால் சுட்டும், 3 பேர் கல்லால் அடித்தும் கொல்லப்பட்டுள்ளனர். மீதி இரண்டு பேரின் மரணத்துக்குக் காரணம் தெரியவில்லை” என்கிறது அந்த அமைப்பு.

அந்த அவமானகரமான ஊர்வலம் நடந்த அதே மே 4-ம் தேதி மணிப்பூர்த் தலைநகர் இம்பாலில் கார்களைக் கழுவி சுத்தம் செய்துதரும் ஒரு சர்வீஸ் ஸ்டேஷனில் இன்னொரு மோசமான சம்பவம். குக்கி இனப் பெண்கள் இருவர் அங்கே வேலை பார்த்தனர். கலவரம் ஆரம்பித்ததும் அவர்கள் உயிருக்கு பயந்து அங்கே தங்கியிருந்தனர். ஒரு கும்பல் அந்த இடத்தைச் சுற்றி வளைத்தது. கும்பலில் இருந்த மெய்தி இனப் பெண்களே தங்களுடன் இருந்த இளைஞர்களைப் பார்த்து, “அந்தப் பெண்களை மானபங்கப்படுத்துங்கள்” என்று சொன்னதாக வழக்கு பதிவாகியிருக்கிறது. அவர்கள் இருவரையும் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கி, பிறகு தலைமுடியைக் கத்தரித்து எடுத்து, உடல் முழுக்கக் காயமாக்கிக் கொன்றுவிட்டு அவர்களின் நிர்வாண உடலைத் தெருவோரமாக வீசிச் சென்றிருக்கிறார்கள்.

‘குக்கி இனத்தினர் ஓப்பியம் பயிரிட்டு போதை மருந்து வியாபாரம் செய்கிறார்கள். அதற்காகவே அவர்கள் கலவரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்’ என்று ஒரு பக்கம் தகவல்கள் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன. ஆனால், சில ஆயிரம் ரூபாய் சம்பளத்துக்காக தங்கள் மலைக்கிராமத்திலிருந்து இங்கே வந்த இந்தப் பெண்கள் எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் உயிரை விட்டிருக்கிறார்கள்.

> • போதைப் பொருள் உற்பத்தி அனைத்து சமூகத்தினரிடமும் இருக்கிறது.
>
> • நிர்வாண சித்ரவதை வீடியோ 78 நாட்கள் கழித்து வெளிவரும் வரை மூடி மறைத்த மோடி ஆட்சி
>
> • பெல்ஜியம் காட்டும் உதாரணம்

**பிரேன் சிங் :** இரண்டு இனங்களையும் கோடு போட்டுக் கிழித்தது போல மணிப்பூர் பிரிந்து கிடக்கிறது. போலீஸில் தொடங்கி அரசு நிர்வாகம் வரை பணிபுரியும் மெய்தி இனத்தினர் யாரும் குக்கிகள் வசிக்கும் பகுதியில் இல்லை. குக்கிகள் யாரும் மெய்தி பிரதேசங்களில் இல்லை. போலீஸ் பயிற்சிக் கல்லூரியில் கொள்ளையிடப்பட்ட 4,537 துப்பாக்கிகள் இப்போது கலவரக்காரர்கள் வசம் உள்ளன. ஒவ்வொரு கிராமத்தையும் அவர்களே காவல் காக்கிறார்கள். இரண்டு இனத்தினரும் கலந்து வாழும் பகுதிகளிலும், எல்லை கிராமங்களிலும்தான் வன்முறைகள் ஓயவில்லை. மூன்று மாதங்களுக்கு முன்புவரை நட்பாகப் பழகியவர்கள் இன்று இனவிரோதிகள். யார் மெய்தி, யார் குக்கி என்று பட்டியல் எடுத்துக்கொண்டு போய்த் தேடுகிறார்கள். மருத்துவமனைகள், கல்லூரிகள் என்று தேடித் தேடி அடுத்த இனத்தினரைப் பிடித்துத் தாக்குகிறார்கள். இப்படி தாக்குதலில் ஈடுபடும் மெய்தி இனத்தினரை ராணுவம் பிடிக்க வந்தால், மெய்தி இனப் பெண்கள் அவர்களை முற்றுகையிட்டு விடுவிக்கச் சொல்கிறார்கள், ராணுவம் செய்வதறியாது திகைக்கிறது.

**திட்டமிட்ட வதந்திகள் :** கலவர நெருப்பு அணையாமல் காக்க, திட்டமிட்டு வதந்திகள் பரப்பப்படுகின்றன. ‘சுரசந்த்பூர் மருத்துவக் கல்லூரியில் பணிபுரியும் மெய்தி இன நர்ஸ் ஒருவரை குக்கி இளைஞர்கள் பாலியல் வன்கொடுமை செய்து கொன்றுவிட்டார்கள்’ என்று ஒரு தகவல் பரப்பப்பட்டது. அந்த நர்ஸின் அப்பாவே ‘என் மகள் பாதுகாப்பாக இருக்கிறார்’ என்று சொல்லியும் இந்த வதந்தி அடங்கவில்லை. அருணாசலப்பிரதேசத்தில் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட ஒருவரின் படத்துடன், ‘குக்கிகளால் தாக்கப்பட்ட மெய்தி பெண்ணுக்கு நீதி வேண்டும்’ என்று போராட்டம் நடத்துகிறார்கள். ‘இம்பாலின் ஷிஜா மருத்துவமனையில் குக்கிகளால் பாலியல் வன்கொடுமையில் கொல்லப்பட்ட 37 மெய்தி பெண்களின் சடலங்கள் உள்ளன’ என்று ஒரு வதந்தி. ‘எங்கள் மருத்துவமனையில் அப்படி சடலங்கள் இல்லை, சடலங்கள் வைக்கும் வசதிகூட இங்கு இல்லை’ என்று அவர்கள் மறுத்தும்கூட இது பரவியபடியிருக்கிறது. இதேபோன்ற வதந்திகள் குக்கிகள் தரப்பிலும் பரவி, அவர்களையும் ஆயுதமேந்தித் திரள வைக்கிறது. அப்பாவிகள்தான் இதனால் சாகிறார்கள். மெய்தி இனத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் ஒருவரின் மனைவியான மூதாட்டி ஒருவர், வீட்டில் பூட்டிவைத்து குக்கிகளால் எரித்துக் கொல்லப்பட வதந்திகளே காரணம்.

**மோடி :** இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால், மொழியின் பெயரால், மாநிலத்தின் பெயரால் என்று எதன் பெயராலும் வெறுப்பு அரசியலைத் தொடர்ச்சியாக வளர்த்துக்கொண்டே இருந்தால் அது எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கு மணிப்பூர் சமீபத்திய உதாரணம். பெரும்பான்மை மெய்தி இனத்தைச் சேர்ந்த முதல்வர் பிரேன் சிங், அந்த இனத்தின் குரலைப் பிரதிபலிப்பவராக மாறியதில் தொடங்கியது பிரச்னை. குக்கி இனத்தில் முன்பு இருந்த தீவிரவாதக் குழுக்கள் மத்திய அரசின் முயற்சியால் அமைதிப் பாதைக்குத் திரும்பின. அவர்களைத் தொடர்ந்து குற்றம் சாட்டியபடி இருந்தார். குக்கிகளும் நாகா பழங்குடியினரும் ஓப்பியம் பயிரிடுவதாகக் குற்றம் சாட்டினார். மெய்தி உட்பட அனைத்து இனங்களிலுமே போதை வியாபாரிகள் உண்டு. அதை, குறிப்பிட்ட இனத்தின் தொழில்போல அவர் சித்திரித்தார். மியான்மரிலிருந்து எல்லை தாண்டி வந்து குடியேறிய வந்தேறிகள் என்று அவர்களை அடையாளப்படுத்தினார். இந்தப் பெரும்பான்மைவாதம் அவருக்கு அரசியல் ஆதாயத்தைக் கொடுத்தது. இரண்டாவது முறையாக முதல்வர் ஆகும் வாய்ப்பையும் வழங்கியது. மெய்தி இனத்தினருக்காக இயங்கும் மெய்தி லீபன் என்ற அமைப்பின் தலைவர் பிரமோத் சிங், ‘முதல்வர் பிரேன் சிங்கை கடவுள் போல வழிபடுகிறேன்’ என்கிறார். ஆனால், மணிப்பூரை மறைமுகமாக இரண்டாகப் பிளந்துவிட்டது.

**அமித் ஷா :** 79 நாள்கள் அமைதிக்குப் பிறகு மணிப்பூர்ப் பிரச்னை குறித்து வாய் திறந்த பிரதமர் நரேந்திர மோடி, “மணிப்பூர், ராஜஸ்தான், சத்தீஸ்கர் என்று இந்தியாவின் மகள்கள் மீது நடக்கும் வன்கொடுமைகள் பற்றிப் பேச வேண்டும்” என்றார். எல்லா மகள்களும் பிரதமரின் அன்புக்குரியவர்கள்தான். ஆனால், திட்டமிட்ட இனமோதலையும், தனிப்பட்ட குற்றங்களையும் ஒப்புமைப்படுத்துவது சரியல்ல. இதைத் தொடர்ந்து பா.ஜ.க தலைவர்கள், மத்திய அமைச்சர்கள் பலரும் மேற்கு வங்காளம், ராஜஸ்தான் என்று சம்பவங்களைக் குறிப்பிட்டுப் பேசுவது, ‘வேறு எங்கேயும் நடக்காததா மணிப்பூரில் நடந்துவிட்டது. இதை ஏன் பெரிதுபடுத்துகிறீர்கள்’ என்று கேட்பது போலவே இருக்கிறது. மாநில அரசின்மீது நம்பிக்கை இழந்து, பிரதமரின் தலையீட்டைக் கோரிவரும் மணிப்பூர் மக்களின் உணர்வை அவமானப்படுத்தும் செயல் இது.

ஐரோப்பாவில் சக்திவாய்ந்த நாடுகளில் ஒன்று பெல்ஜியம். அங்கு கடந்த 50 ஆண்டுகளாக பிரச்னை. ஃபிளாண்டர்ஸ் என்று அழைக்கப்படும் வடக்கு பெல்ஜியத்தில் டச்சு மொழி பேசுவோர் வசிக்கிறார்கள். வல்லோனியா எனப்படும் தெற்கு பெல்ஜியத்தில் பிரெஞ்சு மொழி பேசுவோர் வசிக்கிறார்கள். இருவருமே தனியாகப் பிரிந்து போக வழி தேடுகிறார்கள். ஒருவரை ஒருவர் குறை சொல்கிறார்கள். அங்கு தேசியக் கட்சி கிடையாது, தேசிய மொழி கிடையாது, ‘தேசிய’ என்ற அடையாளத்துடன் எதுவுமே கிடையாது. தேர்தல் முடிந்தால் இரண்டு பிரதேசத்திலும் தேர்வாகி வருபவர்கள் யாருக்கும் மெஜாரிட்டி கிடைக்காது. பல மாதங்கள் பேச்சுவார்த்தை நடத்தி, பல கட்சிகள் இணைந்து கூட்டணி ஆட்சி நடத்துவார்கள். அரசுகள் கவிழும். மோதிக்கொள்வார்கள். ஆனால், எப்போதும் அவர்கள் ஆயுதமேந்தி மோதிக்கொண்டதில்லை, வீடுகளை எரித்ததில்லை, பெண்களை மோசமாக நடத்தியதில்லை. கருத்து மோதல் என்பது வார்த்தைகளின் அளவில்தான் இருக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கிறார்கள். பழம் பெருமைகள் பேசும் நாம்தான் வெறுப்பின் நிலத்தில் விதைத்துக்கொண்டே இருக்கிறோம்.

**நன்றி : ஆனந்த விகடன்**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பேய் - பூதம் ; அறிவியல் விளக்கங்கள்

**பேய்களும் பிசாசுகளும் ஏன் எல்லாருக்கும் தெரிவதில்லை?**

இரவில் இருட்டான அறைக்குள் உங்களால் தனியாகச் செல்ல முடியுமா? முடியாது என்பதுதான் பலரது பதிலாக இருக்கும். காரணம், இருட்டில் பேய், பிசாசு உலாவும் என்று பயமுறுத்தி வைத்திருப்பார்கள்.

சிலருக்கு வளர்ந்தவுடன் பேய் பயம் போய்விடும். சிலருக்கு வளர்ந்த பின்னும் பயம் இருக்கும். சிலர் அமானுஷ்ய உருவங்களைப் பார்த்ததாகவும், சத்தங்களைக் கேட்டதாகவும் சொல்கின்றனர். இதில் எது உண்மை?

பேய், பிசாசு குறித்த ஆய்வுகள் உலகம் முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இதுவரை எதுவும் உண்மை என நிரூபிக்கப்படவில்லை. இருப்பினும் மனிதர்கள் அமானுஷ்யத்தை உணர்வதற்குக் காரணம் நம் மூளைதான்.

நாம் கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகிய ஐம்புலன்கள் மூலம் வெளியுலகைப் புரிந்துகொள்கிறோம்.

இந்த ஐந்து புலன்களில் இருந்தும் பெறப்படும் தகவல்களுக்கு மூளைதான் அர்த்தம் கொடுக்கிறது. சில நேரம் மூளைக்குக் கிடைக்கும் அர்த்தமில்லாத தகவல்களுக்கு அது அர்த்தம் உருவாக்க முயலும்போது, அது யதார்த்தத்துக்குப் புறம்பானதாக இருப்பதால் அவற்றை அமானுஷ்யமாக நாம் உணர்கிறோம்.

உதாரணமாக வானில் நாம் மேகங்களைப் பார்க்கும்போது அவை யானை, முயல் போன்ற உருவங்களில் தோன்றும் இல்லையா? இதை விஞ்ஞானிகள் பரேடோலியா (Pareidolia) என்கின்றனர். அதாவது நம் மூளை, தான் காணும் புதிய விஷயங்களைத் தனக்குத் தெரிந்த விஷயங்களைக் கொண்டே விளக்க முயற்சி செய்கிறது. அந்த வகையில் நாம் சுற்றுப்புறத்தில் காணும் விஷயங்களை மூளை தவறாக அர்த்தப்படுத்திக்கொள்ளும்போது, உருவம் இருப்பதைப்போல கற்பனை செய்துகொள்கிறோம்.

பொதுவாக இருளில்தான் நாம் பேயைப் பார்க்கிறோம். இருள் என்பது காட்சிகள் அற்ற நிலை. அந்தச் சூழலை விளக்குவதற்கு மூளை ஏற்கெனவே மனதில் பதிந்து வைத்திருக்கும் காட்சிகளை நினைவுப்படுத்துகிறது. அதனால் நீங்கள் ஏற்கெனவே பார்த்து வைத்திருக்கும் உருவங்கள் நினைவுகூரப்பட்டு, உங்களைப் பயமுறுத்துகின்றன.

சிலருக்கு அமானுஷ்ய உருவம் கண்ணுக்குத் தெரிவது மட்டுமல்லாமல், அவற்றைப் பார்க்கும்போது மூச்சு முட்டுவது போலவும், நெஞ்சு கனமாக இருப்பது போலவும் தோன்றும். இதற்குக் காரணம் கார்பன் மோனாக்ஸைடு வாயு. நாம் பயன்படுத்தும் எரிபொருள்களில் இருந்து வெளியாகும் கார்பன் மோனாக்ஸைடு அதிக அளவில் சுற்றுப்புறத்தில் கலக்கிறது. **இந்த வாயுவுக்கு மணமோ சுவையோ நிறமோ கிடையாது. அதனால், அதன் இருப்பைக்கூட நம்மால் உணர முடியாது. கார்பன் மோனாக்ஸைடு வாயுவை நாம் குறிப்பிட்ட அளவுக்கு மேல் முகர நேர்ந்தால் நமக்குப் பிரமை ஏற்படும். அப்போது மூளை உருவங்களைக் கற்பனை செய்யும். அத்துடன் மூச்சு விடுவதில் சிரமம், குழப்பம், நெஞ்சடைப்பு ஆகியவையும் ஏற்படும். இதையும் நாம் பேய் என்கிறோம்.**

சரி, நாம் காதில் கேட்கும் அமானுஷ்ய சத்தங்களுக்கு என்ன அர்த்தம்? இதுவும் நம் புலன்களில் ஏற்படும் தடுமாற்றம்தான். ஒலியை நாம் அலைவரிசையால் அளக்கிறோம். மனிதர்களின் காது 20Hz - 20kHz அளவிலான அலைவரிசைகளையே கேட்கும் தன்மை கொண்டது. 20kHzக்கு அதிகமான அலைவரிசைச் சத்தத்தை நாம் மீயொலி என்கிறோம். அதை நம்மால் கேட்க முடியாது. ஆனால், நாய், வெளவால் போன்றவை கேட்கும். அதேபோல 20 Hzக்கு குறைவான சத்தத்தை அகவொலி என்கிறோம். இதை யானைகள், திமிங்கிலங்கள் உள்ளிட்டவை கேட்கும்.

இந்த அகவொலியை மனிதர்கள் கேட்க முடியாவிட்டாலும் அவற்றால் பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு. பூமியில் நில அதிர்வு ஏற்படும்போதோ, பருவநிலை மாறும்போதோ அகவொலி உருவாகி, அது மனிதர்களைப் பாதிக்கும். அப்போது மனக்குழப்பமோ, பயமோ, சித்தபிரமையோ ஏற்படலாம். அதேபோல பூமியின் புவிகாந்தப்புலத்தில் ஏற்படும் மாற்றம் மனிதர்களின் மூளையில் உள்ள தற்காலிக மடலைத் (Temporal Lobe) தூண்டுகிறது. தற்காலிக மடல் என்பது நம் உணர்வுகள், நினைவுகள், உருவங்களை அடையாளம் காணுதல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் பகுதி. அந்தப் பகுதி தூண்டப்படுவதால் குழப்பம் ஏற்பட்டு நமக்கு அமானுஷ்ய உணர்வு தோன்றலாம். இந்தப் பாதிப்பு ஒரு சிலருக்கு மட்டும் இருப்பதால்தான் அனைவராலும் அமானுஷ்ய விஷயங்களை உணர முடிவதில்லை.

சில நேரம் நாம் இரவு தூங்கும்போது, யாரோ மேலே ஏறி அழுத்துவதுபோல் இருக்கும். நம்மால் கண்களைத் திறக்க முடியாது. கத்தலாம் என்றால் குரல் வெளியே வராது. திரும்பிப் படுக்கலாம் என்று நினைத்தாலும் முடியாது. சில நிமிடங்கள் கழித்துத்தான் எதுவும் செய்ய முடியும். இதை அமுக்குவான் பேய் என்று சொல்வார்கள்.

உண்மையில் மேற்சொன்ன நிலை தூக்கத்தில் ஏற்படும் இடையூறால் உருவாகிறது. நாம் உறக்கத்தில் நான்கு நிலைகளுக்குச் செல்வோம். இதில் விரைவான கண் அசைவுத் தூக்கம் என்கிற நிலைக்குச் செல்லும்போது கனவுகள் தோன்றும். நாம் கனவு காணும்போது உறக்கத்திலேயே உடலை அசைத்தால் காயம் ஏற்படலாம் என்பதால், தசைகளை மூளை முடக்கிவிடும். இந்த நிலையில் நாம் விழித்து எழுந்தால், மூளை தசைகளை மீண்டும் இயக்க ஒருசில நிமிடங்கள் ஆகும். அப்போது நாம் செய்ய நினைப்பதை உடல் செய்யாது. இதைத்தான் நாம் பேய் என அஞ்சுகிறோம்.

அதேபோல் இன்று இணையத்தில் காணக் கிடைக்கும் அமானுஷ்ய காணொளிகள் அனைத்தும் கேமரா, மைக் ஆகிய சாதனங்களின் குறைபாட்டால் ஏற்படுபவை. அல்லது பயமுறுத்துவதற்கு என்றே போலியாக உருவாக்கப்பட்டவை. அதனால் இனி பேய், ஆவி போன்ற இல்லாத ஒன்றை நினைத்துப் பயப்படாதீர்கள். அடுத்த முறை நீங்கள் இருளில் செல்லும்போது அமானுஷ்ய உணர்வு ஏற்பட்டால், அது உங்கள் புலன்களால் ஏற்படும் குழப்பம் என்பதைப் புரிந்துகொள்வீர்கள்தானே!

**நன்றி : தமிழ் இந்து**

---

*1 ஆம் பக்க தொடர்ச்சி*

ஜூலை 22, இரவு 7 மணிக்கு பெரியக்காட்டுபாளையத்தில் நிறைவுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஆசிரியர் ரவி, பாவணன் உணவு ஏற்பாடு செய்தனர், வார்டன் சிவகுமார், அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர் அறிவழகன் ஆகியோர் தோழர்கள் இரவு தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

கோவை : எது திராவிடம்? எது சனாதனம்? தெருமுனைக் கூட்டங்கள் கோவையில் 27.07.2023 அன்று தொடங்கியது. சுல்தான்பேட்டை, சுல்தான்பேட்டை, ஜே கிருஷ்ணாபுரம், ஜல்லிப்பட்டி, வரப்பாளையம், நல்லூர்பாளையம் உள்ளிட்ட 5 இடங்களில் கழகத் தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது.

கிருஷ்ணன் பகுத்தறிவுப் பாடல்களை பாட, நிர்மல்குமார் - புரட்சி தமிழன் குழு எது சனாதனம்? எது திராவிடம்? என்பது குறித்து கேள்வி, பதில் வடிவில் உரையாடல் நிகழ்வை நடத்தினார்கள். J.கிருஷ்ணபுரம்பகுதியில் எது சனாதனம்? எது திராவிடம்? கேள்வி பதில் வடிவில். நிர்மல்குமார். தமிழ்ச்செல்வி, கற்பகம் உரையாடல் நிகழ்த்தினார்கள்,

கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, விசிக செஞ்சேரி பகுதி பொறுப்பாளர் விடுதலைசெல்வன், மகிழவன் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். சுல்தான்பேட்டை செம்பருதி நன்றி கூறினார்.

CPIM செல்வகுமார், ரவி, விசிக பாலு, நாகராஜ், மாரன். மஞ்சுளா. ஆட்டோ சந்திரன் தனது குடும்பத்துடன் கலந்து கொண்டனர்.

விசிக தோழர் விடுதலை செல்வன் திமுக கிளைச் செயலாளர் துரைசாமி தேனீர் செலவுகளையும், மதிய, இரவு உணவு திமுக ஊராட்சி உறுப்பினர் மந்தராசலம், ஆட்டோ ஓட்டுனர் மின்னல் கனகு ஏற்பாடு செய்தார். விசிக குணபாலன் குளிர்பானம் வழங்கினார்.

கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், கோவை மாநகர அமைப்பாளர் நிர்மல்குமார். உக்கடம் கிருஷ்ணன், புரட்சித் தமிழன், திருப்பூர் மகிழவன், சூலூர் தமிழ்செல்வி, சூலூர் பாபு, பொங்களூர் கார்த்தி, கலங்கல் கற்பகம், திருப்பூர் முத்து, செம்பருதி, அய்யப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நன்கொடையாக ரூ.1620 திரட்டப்பட்டது.

*1 ஆம் பக்க தொடர்ச்சி*

புரட்சிகர இளைஞர் முன்னணி மாநகர செயலாளர் வின்சென்ட், விசிக மண்டல அமைப்பு செயலாளர் இமயவரம்பன், தமிழ்த்தேச மக்கள் முன்னணி மாவட்ட செயலாளர் மாரியப்பன், தமிழ் கலாச்சார இயக்க ஒருங்கிணைப்பாளர் பொன்.சரவணன், எம்.எல்.ரெட்ஸ்டார் குணாளன், தமிழ்ப் புலிகள் கட்சி உதயபிரகாஷ், உழைப்போர் இயக்கத்தைச் சார்ந்த க.கண்ணன், கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் உரை நிகழ்த்தினார்.

நிறைவாக மணிப்பூர் கலவரத்தை விளக்கி கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்டன உரையாற்றினார். தொடர்ந்து இரயில் நிலையத்தை முற்றுகையிட முழக்கங்களோடு தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் சென்றனர். காவல்துறை அனுமதி மறுத்து கைது செய்து தனியார் மண்டபத்தில் வைத்தது. மண்டபத்தில் 200க்கும் மேற்பட்ட தோழர்கள் கைது செய்து வைக்கப்பட்டனர். மண்டபத்திற்குள் பெரியார் விழுது யாழினி, கோவிந்தராஜ் ஆகியோர் பாடல்களோடு நிகழ்வு தொடங்கியது. போராட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து அமைப்புகளைச் சார்ந்த பொறுப்பாளர்கள் ஒன்றிய மோடி ஆட்சியின் அவலங்களைப் பற்றியும் 2024 நாடாளுமன்ற தேர்தலில் மோடி அரசு அகற்றப்பட வேண்டும் என்றும் தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர். தமிழ்த்தேச மக்கள் முன்னணி பொறுப்பாளர் அருண் சோரி மணிப்பூரில் என்ன நடப்பது என்ன என்பதுக் குறித்து விரிவாக பேசினார். கைது செய்யப்பட்ட தோழர்கள் மாலை 5 மணிக்கு விடுதலை செய்யப்பட்டார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP    Posted : Augest 03, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran